சென்னை தீவுத் திடலில் செயல்பட்டு வரும்

தமிழ்நாடு (டிரைவ் - இன்) உணவகத்தில் திடீர் ஆய்வு!

சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மேற்கொண்டார்!

சென்னை, ஜூன் 5 -

சென்னை தீவுத்திடலில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு (டிரைவ் இன்) உணவகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திடீராய்வு மேற்கொண்டார்.

சென்னை தீவுத்திடலில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு (டிரைவ் இன்) உணவகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சமைக்கப்பட்ட உணவு வகைகளின் ருசியை சரிபார்த்தார்.

சென்னை தீவுத்திடலில், தமிழ்நாடு அரசின் திட்டங்கள் சாதனைகளை பொதுமக்கள் தெரிந்து கொள்ள இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் இந்த ஆண்டு முதல் தமிழ்நாட்டை சேர்ந்த கைத்தறி நெசவாளர்கள், கைவினைக் கலைஞர்கள் பயன்பெறும் வகையில் 300 அரங்கங்கள், கலைநிகழ்ச்சிகளுடன் பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்ற சென்னை விழா உள்பட பல்வேறு தனியார் நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தீவுத்திடலுக்கு வருகை புரியும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு கூடுதல் சேவைகளை அளிக்கும் வகையில் திறந்த வெளி திரைங்கம், பார்ப்பிக்யு அசைவ உணவு பிரிவு, குயிக் பைட்ஸ் என்ற சிற்றுண்டி உணவு பிரிவு ஆகியவற்றுடன் குளிரூட்டப்பட்ட ஓட்டல் தமிழ்நாடு உணவகம் செயல்பட்டு வருகின்றது.

தற்போது நடைபெற்ற ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளை தீவுத்திடல் திறந்த வெளி திரையரங்கில் காண, ஏராளமான வாடிக்கையாளர்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து உணவு வகைகளை ருசி பார்த்துக் கொண்டே கிரிக்கெட் போட் டிகளை கண்டு களித்தனர்.

சென்னை தீவுத்திடலில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு (டிரைவ் இன்) உணவகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சமைக்கப்பட்ட உணவு வகைகளின் ருசியை சரிபார்த்தார். அப்போது காய்கறிகள் சரியாக வேக வைக்கப்பட்டுள்ளனவா, இனிப்பு, உப்பு, காரம், புளிப்பு ஆகிய சுவைகள் சரியாக உள்ளனவா என்று உணவு வகைகளின் மாதிரிகளை உட்கொண்டு ருசியை சரிபார்த்தார். பின்னர் உணவக மேலாளர் மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடிய போது மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல்துறை கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களில் சீரமைப்பு பணிகள் பொதுமக்களை கவரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு தற்போது புதுப்பொலிவுடன் திகழ்கின்றன. அதே நேரம் இங்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அவர்கள் விரும்பும் வகையிலான உணவு வகைகளை விரைந்து தயாரித்து வழங்க வேண்டும். உணவுப் பொருட்களை தலைமை சமையலர், ஓட்டல் மேலாளர் ஆகியோர் அவ்வப்போது ருசி பார்த்து உணவுவகைகளை வாடிக்கயாளர்கள் திருப்தியாக சாப்பிடுவதை உறுதி செய்ய வேண்டும். ஆர்டர் செய்த உணவு வகைகளை குறித்த நேரத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி மீண்டும், மீண்டும் வரும் ஆர்வத்தை உண்டாக்க வேண்டும். உணவகத்தில் பணியாற்றிடும் அனைவரும் தங்கள் பணிகளை சரியாக செய்து பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருவதற்கான முயற்சிகளை ஆர்வத்தோடு மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, உதவி தலைமை மேலாளர் (ஓட்டல்கள்) சௌ.வெங்கடேசன், ஓட்டல் தமிழ்நாடு உணவகத்தின் மேலாளர், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சவுதி அரேபிய – கிழக்கு மண்டலம்

தம்மாமில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

இறையன்பன் குத்தூஸ் – வெங்கடேசன் – ஆரிப் மகபூப் பங்கேற்பு!

சவுதி அரேபியா, ஜூன் 5

சவுதி அரேபியா தம்மாமில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா இந்திய பன்னாட்டு பள்ளியில் 10 மற்றும் 12ம் வகுப்பில் 2023-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்வில் சாதனை படைத்த முதல் இரண்டு மாணவ, மாணவிகளுக்கான பாராட்டு விழா ஆக முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் பங்கேற்று சிறப்பித்தார்.

என்.ஆர்.ஐ.ஐ.ஏ. முதன்மைச் செயலாளர் மயிலாடுதுறை வெங்கடேஷ் மற்றும் NRTIA துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மக்பூல் தலைமையில் , கிளை பொறுப்பாளர் முகவை சீனி முகம்மது மற்றும் பொருளாளர் துறையூர் கமால் பாட்சா ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக தாயகத்திலிருந்து வருகை தந்த தமிழ்நாடுசிறுபான்மையினர் ஆணையம் துணை தலைவர் இறையன்பன் குத்தூஸ் கலந்து கொண்டார்.

NRTIA சவூதி அரேபியா அமைப்பாளர் பிரேம்நாத் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினரை ஏற்பாடு செய்த சேலம் சிக்கந்தர் நன்றியும் மேலும் சிறப்பு அழைப்பாளராக தொழில் அதிபர் அப்துல் மஜீத் பத்துருதீனுக்கு வளைகுடா சாதனைத் தமிழன் சமூகப் பண்பாளர் விருது வழங்கப்பட்டது.

அப்துல் அலி மண்டலத் தலைவர் ஐ.டபிள்யூ.எப். மோகன் தாஸ், மணிகுட்டன், மஞ்சு, ஷாஜி, தொழிலதிபர் திருச்சி காந்தராஜ், மதுர உணவகம் முத்து, தி.மு.க. மூத்த உறுப்பினர் சிக்கந்தர் பாபு, தி.மு.க. உறுப்பினர் திருச்சி குண்டு பிலால், பரங்கிப்பேட்டை நவ்ஷாத், கேரளா பத்திரிக்கையாளர் ஹபீப் ரஹ்மான் ஏலங்குளம், ரஹ்மத்துல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியை ஆசிரியர் ஃபரிதா தொகுத்து வழங்கியனார். துறையூர் கமால் வரவேற்றுப் பேசினார் வழங்கினார். இறுதியாக முகவை சீனி முஹம்மது நன்றி கூறினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் சவுதி அரேபியா கிழக்கு மண்டலம் யுனிவர்சல் அப்துல் மஜீத் பத்ருதீன் சிறப்புரை ஆற்றினார், நாடு ,மொழி , கடந்து சமுதாயப் பணியில் மிகைத்து விளங்கும் நாஸ் சௌகத் அலி வக்கம் அவர்களுக்கு, சமூக சேவைக்கான விருது வழங்கப்பட்டது .

மருத்துவ சேவை செய்து கொண்டிருக்கும் சமுதாய அக்கறையுடன் மருத்துவர் பிஜு வர்கீஸ் அவர்களுக்கும் நினைவு கேடயம் வழங்கப்பட்டது. வளைகுடாவில் நடைபெற்ற ஹாக்கி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு பொருள்கள் வழங்கப் பட்டது.

NRTIA சவூதி அரேபியா தம்மாம் நிர்வாகிகள் ஏர் போர்ட் கணேசன், அபூ ரயான் என்னும் ஆசிப் ஃபாரூக் ராஜா கள்ள குறிச்சி முகமது ஃபாரூக், ஏ.எஸ்.டி. சிவகுமார், திருச்சி யூனுஸ், திருச்சி நூர், கிரிக்கெட் டீம் ரிஷி, உணவகம் சாகுல், ஜுபைல் யாசின், கள்ளக்குறிச்சி முஹம்மது ஃபாரூக், தமிழ் பற்றாளர் நவரத்தினம், மங்களூர் அனிபா, சென்னை இம்ரான் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

செஞ்சி நான்கு முனை சந்திப்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

விழுப்புரம், ஜூன் 5-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு செஞ்சி நான்கு முனை சந்திப்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்திருவுருவப்படத்திற்கு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஒடிசா ரயில் விபத்தில்இறந்தவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் கழகத்தினர் அமைதி ஊர்வலம் நடத்தி அஞ்சலி செலுத்தினர்.

ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற ரயில் விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்கள் பரிதாபமாக பலியாகினர்.

ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்செஞ்சியில் அமைதி ஊர்வலமும் மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி நான்கு முனை சந்திப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மௌன ஊர்வலம் நடத்தி ஒரு நிமிடம்மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியர் அலிமஸ்தான், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன்,நகர செயலாளர் கார்த்திக், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் ஒன்றியக் கழகம் சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் ஒன்றிய செயலாளலாரும் ஒன்றியபெருந்தலைவருமான புலிவலம் ஏ.தேவா தலைமையில் கழகக் கொடி ஏற்றப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும், உணவும் வழங்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்புடன் கொண்டாடுவோம்!

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 5-

தலைமை தி.மு.க. தீர்மானக் குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், நேற்று காலை, சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழகத் தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையிலும் தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைத்திலிங்கம், கீரை எம்.எஸ்.விஸ்வநாதன், அக்ரி கே.பி.டி.கணேசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக் கூட்டத்தில் க.வேங்கடபதி மு.முத்துச்சாமி, பி.நாச்சிமுத்து, வ.சத்தியமூர்த்தி, எம்.ஜெயக்குமார் ஆர்.சேதுநாதன், ஆதி.சங்கர், ரெஜினால்ட், வெற்றிச்செல்வன், ப.சரவணன், செஞ்சிசிவா, மு.இரா.செல்வராஜ், எம்.வீரகோபால், என்.வி.காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கழக தீர்மானக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழக உயர்நிலை செயல் திட்ட குழு அறிவித்த முடிவுக்கு இணங்க கீழ்கண்ட தீர்மானம் அனைவரின் ஒப்புதலோடு நிறைவேற்றப் படுகிறது."தமிழே உயிராகத் தமிழ் இனமே உணர்வாக தமிழர் நலனும் தமிழ் நாட்டின் வளர்ச்சியும் வாழ்நாள் செயல் திட்டமாக கொண்ட ஓய்வறியா சூரியனும்,தனது 94 ஆண்டு காலம் ஆயுள் காலத்தில் 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரரும், ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு கால பங்களிப்பாளரும், அரை நூற்றாண்டு காலம் காலகட்டத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும், களம் கண்ட 13 தேர்தலிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் , ஐந்து முறை தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும், நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும், இந்திய ஜனநாயகத்தின் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் என கதொட்ட துறைகள், அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத் திறன் கொண்ட படைப்பாளரும் தான் ஆட்சி காலத்தில் முதலமைச்சராக அமர்ந்த போது எல்லாம் தமிழ்நாட்டு அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வி, மருத்துவம்,வேளாண்மை, தொழில் வளர்ச்சி, பொருளாதாரம், நதிநீர் பிரச்சனை, பெண்ணிய கோட்பாடு,இட ஒதுக்கீடு,சமூக நீதி, தொழிலாளர் நலனை முன்னிறுத்திச் சட்டங்கள் வாரியங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து விவசாயிகளின் பாதுகாவலராக இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த வருமான நம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா. 2023 ஜூன் 3 ஆம் தேதி தொடங்க உள்ளது..

விழா தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும், உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற,தி.மு.க உயர்நிலையில் திட்ட குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படி:

வடசென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்திலும், ஜூன் 20 ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத் திறப்பு விழாவிலும், 2023 ஜூன் 3 தொடங்கி, 2024 ஜூன் 3 வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்திடவும்,

ஊர் தோறும் திமுக எனும் தலைப்பில் கிளை அளவில் இருக்கும் நமது பழைய கொடி கம்பங்களை புதுப்பித்து புதிய இரு வண்ணக் கொடிகளை ஏற்றிடவும் எங்கெங்கும் கலைஞர் என்ற அடிப்படையில்

கலைஞரின் உருவச் முழு சிலை மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளில் கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும்;

கழகமே குடும்பம் எனும் தலைப்பில் பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்வதில், கழகத் தீர்மானக் பங்கேற்றிடவும். குழு சிறிய அளவிலாவது

என்றென்றும் கலைஞர் எனும் தலைப்பில் கருத்தரங்கம் பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளில் திமுக தீர்மானக் குழு நிர்வாகிகள் கலந்து கொண்டு தமிழ்நாடு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தின் பாரம்பரிய மான ஜல்லிக்கட்டு விளையாட்டு உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டபூர்வமாக வெற்றி பெறக் கடுமையாக முயற்சி எடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு நன்றியினையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது. புதுக்கோட்டையில் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு திமுக சார்பில் எடுக்கும் பாராட்டு விழாவிற்கும், இக்கூட்டம் நன்றியை, வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

உடன்பிறப்புகளாய் இணைவோம் என்ற அடிப்படையில் தொகுதிக்கு 50 ஆயிரம் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படக் கழக தீர்மானக் குழுவின் நிர்வாகிகள் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கிறது.

சிங்கப்பூர் ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமைந்ததுடன் ரூபாய் 3,233 கோடிக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் அரசு முறை பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்தத் தீர்மானக் குழு தெரிவிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நூற்றாண்டு விழாவையொட்டி

பல்லாவரம் மண்டல அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் வெண்கல சிலை!

2 வது மண்டலக் குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் தீர்மானம்!

பல்லாவரம், ஜூன் 5-

தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டல கூட்டம் குரோம்பேட்டை உள்ள அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை அன்று மண்டலக் குழுத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் உதவி ஆணையர் மாரிசெல்வி முன்னிலையில் நடந்தது. கூட்டத்தில் மண்டலத்திற்கு உட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சாலை சீர் அமைத்தல் குப்பைகள் அகற்றல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என மண்டலக் குழுத் தலைவர் உறுதி அளித்தார்.

மக்கள் கோரிக்கைகள் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றுதல் உட்பட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல் தீர்மானமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பல்வேறு துறைகளில் முத்திரை பதித்தவர் - திராவிட இயக்க சிந்தனைகளை திரைப்பட வசனங்கள் மூலம் இளைஞர்கள் மத்தியில் விதைத்து சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தியவர்.

தமிழ் மொழிக்கு செம்மொழி அங்கிகாரம் பெற்று தந்தவர், மாநில உரிமைகளுக்காக போராடிய மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் நவீன தமிழகத்தை மட்டும்மல்ல நவீன இந்தியாவையும் உருவாக்கியவர் என்றெல்லாம் புகழப்படும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாளை ஒட்டி அவரது நினைவினை போற்றும் வகையில் நமது தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2ல் பல்லாவரம் அலுவலகத்தில் முன்பு வாயிலில் கலைஞரின் வெண்கல சிலை அமைக்க இந்த மாமன்றத்தின் சார்பாக தீர்மானத்தினை கொண்டு வரப்பட்டது. மாமன்ற உறுப்பினர்கள் மூலம் இந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றி, தாம்பரம் மாநகராட்சி மேயர் அவர்களுக்கு முன்மொழிய இத்தீர்மானம் அனுப்பிவைக்கப்பட்டு, அவர்கள் மூலம் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல சிலை அமைக்க இம் மாமன்றம் பெருமையுடன் இத்தீர்மானம் மண்டலக் குழுத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரையால் கொண்டு வரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தியாகராய நகரில் கலைஞர் நூற்றாண்டு விழா!

சென்னை, ஜூன் 5 -

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்டத்தில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி கழக செயலாளர் கே .ஏழுமலை எம்.சி., கே.எஸ் .வெல்டிங் மணி, வட்டக் கழகச் செயலாளர் கே. எஸ்.வெல்டிங் ராஜா, மாமன்ற உறுப்பினர் திருமதி.பா. கார்த்திகாபாஸ்கர் ஆகியோர் முன்னிலையில், ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்த நாள் விழாவை 132 வட்டத்துக்கு உட்பட்ட ஷேர்கான் தோட்டம், ரங்கராஜபுரம் 60 குடிசை பகுதி, சிஆர்பி கார்டன் முதல் தெரு தெரு தனக்கோடி அம்மாள் தெரு, சிஆர்பி கார்டன் 2வது, சிஆர்பி கார்டன் 3வது தெரு தெரு.,சிஆர்பி கார்டன் இரண்டாவது குறுக்கு தெரு சி ஆர் பி கார்டன் மெயின் ரோடு, வள்ளியம்மாள் தோட்டம் 3வது தெரு கார்ப்பரேஷன் காலனி மெயின் ரோடு அஜீஸ் நகர் முதல் தெரு, அஜீஸ் நகர் 2வது தெரு, அஜீஸ் நகர் மெயின் ரோடு, ரங்கராஜபுரம் மெயின் ரோடு, விஸ்வநாதபுரம் மெயின் ரோடு. ஸ்டேஷன் வியூ ரோடு, ரயில்வே பார்டர்ரோடு ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரித்து வைக்கப்பட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் வட்ட மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

அரக்கோணம் நகரத்தில் வி.எல்.ஜோதி தலைமையில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மலரஞ்சலி!

அரக்கோணம்,ஜூன் 5-

முதல்வர் ஆணைக்கிணங்க ராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வழிகாட்டிலின் படி நவீன தமிழகத்தை செதுக்கிய சிற்பி முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின். 100வது பிறந்த நாளை முன்னிட்டு அரக்கோணம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி சுவால் பேட்டை பிள்ளையார் கோயில் அருகில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மற்றும் ஒடிசா ரயில் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

இதில் மு.கன்னையன் என்.ராஜ்குமார், லட்சுமி பாரி, துரைசீனிவாசன் எம்.சி., கோ.வ.தமிழ்வாணன், நந்தா தேவி எம்.சி., எஸ்.ரமேஷ்பாபு, ஆர்.லிங்கம் எ.தமின்அன்சாரி, வி.பால கிருஷ்ணன், எம்.கே.சிவா, டி.அந்தோணி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை மற்றும் மாவட்ட அலுவலகத்தின் முன்பு கலைஞர் அவர்களின் திரு உருவ படத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் நவாப், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், சித்ரா சந்திரசேகர், நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணகிரி நகர மன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.